'SIDDHANTAHM'
Vol. 27—No. 10

312

உ
சிவமயம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 27 | ஜய ஐப்பசி 1954 அக்டோபர் | இதழ் 10

உள்ளுறை — பக்கம்

திருஆலங்காட்டின் சிறப்பு ... 337
இன்பமும் துன்பமும் ... 343
விருத்தாசலம் ... 348
சிவஞான தீபம் ... 353

MADR
312
4-54
R673m211, N178
N54.27.10.
186905

...லகப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல்.
...யர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

...த்தாந்த மகா சமாஜம்
...ராட், இராயப்பேட்டை, சென்னை-14

## சமாஜ மாதக் கூட்டங்கள்

நமது சமாஜத்தின் மாதக்கூட்டம் ஒன்று திருவாலங்காட்டில் 19-9-54 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி முதல் 10 மணி வரையில் மிகச் சிறப்பாக நமது சமாஜத் தலைவர் திரு. ராவ்சாஹெப்-நல். முருகேசமுதலியாரவர்கள் தலைமையில் நடைபெற்றது. முதன் முதலாக வித்துவான் புண்ணியகோடி முதலியார் அவர்கள் இறைவணக்கச் செய்யுட்களை இன்னிசையில் ஓதினார்கள். பிறகு இறைப்பணியாளர் - திரு. சபாபதி தேசிகரவர்கள் வரவேற்புரைகூறி வரவேற்புச் செய்யுளையும் வாசித்தளித்தார்கள். பிறகு தலைவரவர்கள் தமது முன்னுரையில் ஆலங்காட்டின் சிறப்பு, காரைக் காலம்மையார் சிறப்பு, ஊர்த்துவ தாண்டவச் சிறப்பு முதலியனபற்றிச் சில அரியகருத்துக்களைத் தெரிவித்தார்கள். பிறகு திரு - ம. சி. நித்தியாநந்த முதலியார் எனும் சைவ இளைஞர் " நடராஜர் திருவுருவ தத்துவம் " பற்றிப் பல அருமையான கருத்துக்களை, " உண்மை விளக்கம் " கூறும் சில செய்யுள்களின் துணைகொண்டு, செம்மையாகவும் நிதானமாகவும் விளக்கினார்கள். இதன் பிறகு திரு. ம. பா. அவர்கள் " திருவாலங்காட்டின் சிறப்பு " என்பது பற்றியதொரு சிறு சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். (இதன் சுருக்கத்தை இவ்விதழில் மற்றோரிடத்திற் காண்க. பிறகு திரு. அ. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் " சுந்தரரும் திருவாலங்காடும் " என்பது பற்றியும், ஆர்க்காடு போர்டு உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியர், வித்வான் - திரு. சண்முக தேசிகரவர்கள் " இறையன்பு " என்பது பற்றியும், திரு-ச. சிவகுமாரன் எம். ஏ. அவர்கள் " இறவாத இன்ப அன்பு " என்பது பற்றியும், திரு. சபாபதி தேசிகர் அவர்கள் திருவாலங்காட்டின் பெருமை, சமாஜத்தொண்டு முதலியனபற்றியும் பேசி நன்றியின் முற்பகுதியை முடித்தார்கள். பிறகு திருவாலங்காடு கிராம பஞ்சாயத்தின் தலைவர் - திருவாளர்-திருமலை பிள்ளையவர்கள் வரவேற்புக் கழகத்தலைவர் எனும் முறையில் சமாஜம், கூட்டத் தலைவர், சொற்பொழிவாளர்கள், கூட்டத்திற் கலந்துகொண்ட பல அன்பர்கள், கூட்டத்திற்காக ஏற்பாடுகள் பலவற்றைச் செய்த அன்பர்கள் ஆகிய எல்லோருக்கும் நன்றிகூறினார்கள். இறைவணக்கத்துடன் இம் மாதக் கூட்டம் இரவு 10 மணிக்கு நிறைவுற்றது.

Regd M. 2330

உ

சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 27 | ஜய ஐப்பசி 1954 அக்டோபர் | இதழ் 10

## திரு ஆலங்காட்டின் சிறப்பு*

பத்திராசிரியர்.

திரு ஆலங்காடு தொண்டை நாட்டிலுள்ள பாடல் பெற்ற சிவஸ்தலங்கள் முப்பத்திரண்டனுள் மிகச் சிறந்த தொன்று. திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் பதிகம் இரண்டும், நம்பியாரூரர் பதிகம் ஒன்றுமாக நான்கு திருப்பதிகங்கள் இத்தலத்துக்குண்டு. சோழ நாட்டில் அவதரித்த காரைக்காலம்மையார், திருக்கைலாயம் சென்று கைலாய நாதனால் "அம்மையே," என்று அழைக்கப்பெற்று, எலும்பும் தோலும் கூடிய பேய் உருவத்தோடு, இறைவன் கட்டளைப்படி, இத்தலத்துக்குத் தலையால் நடந்து வந்து, இங்கு எண்தோள் வீசி நின்றாடும் பிரானுடைய ஊர்த்வ தாண்டவ தரிசனம் அருளப்பெற்று, இத்தலத்திலேயே பல்லாண்டுகள் நித்யவாசம் செய்து, பரமுத்தி யெய்தியதும் இத்தலத்தின் சிறப்பில் ஒரு பெரும் பகுதியாகும். தேவார முதலிகள் மூவருக்கும் அம்மையார் முற்பட்டவராதலின், இத்தலத்து எம்பெருமான்மீது, அம்மையார் அருளிச்செய்த இரண்டு திருப்பதிகங்களும் "மூத்த திருப்பதிகங்கள்" என்ற சிறப்புப் பெயரோடு, ஆலவாயண்ணல் திருவாக்காகிய திருமுகப்பாசுரத்திற்கு அடுத்தபடியாகப் பதினோராம் திருமுறையுள் இடம் பெற்

*19-9-54-ல் திரு ஆலங்காட்டில் நடந்த சமாஜ மாதக்கூட்டத்தில் நான் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

றுள்ளன. அம்மையார் அருளிய திரு இரட்டைமணி மாலையும் அற்புதத் திருஅந்தாதியும், இத்திரு முறையில் உள்ளனவே. "அற்புதத் திருவந்தாதி" சைவ சித்தாந்தக் கருத்துக்கள் நிரம்பிய கருவூலம், சிவஞான சுவாமிகளால் தமது உரைகளுள் ஆங்காங்கு சிறந்த மேற்கோளாகக் காட்டப்பெறும் பெருமை வாய்ந்தது, அம்மையாருடைய சிவானுபவத்தையும் ஞானசெல்வத்தையும் படம் பிடித்துக் காட்டுவது.

சேக்கிழார்பெருமான் இத்தலத்தின் பெருமையைப் பல இடங்களில் அனுபவித்துக் கூறுகின்றார். வேளாளர் வாய்மைக்கும் சிறப்புக்கும் ஒரு செப்பேட்டுப் பட்டயம் போன்றதொரு நிகழ்ச்சி இத்தலத்தின் சிறப்பில் ஒருகூறு என்பதைத் திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணத்துள் 3-ம் பாடலிற் கூறுகின்றார். திருநாவுக்கரசர் புராணத்துள் 341, 342-ம் பாடல்களிலும், காரைக்காலம்மையார் புராணத்துள் 61 முதல் 4 பாடல்களிலும், திருஞான சம்பந்தர் புராணத்துள் 1007-ம் பாடல் முதல் 5 பாடல்களிலும், ஏயர்கோன்கலிக்காமர் புராணத்துள் 282, 283-ம் பாடல்களிலும் திருவாலங்காட்டின் சிறப்பு கூறப்பெறுகின்றது. பரணதேவ நாயனார் அருளிய "சிவபெருமான் திருவந்தாதியுள்" 50-ம் பாடலிலும், பட்டினத்துப் பிள்ளையார் அருளிய 'திருஏகம்பமுடையார் திருஅந்தாதியுள் 65-ம் பாடலிலும் ஆலங்காடு புகழப் பட்டுள்ளது. அருணகிரிநாதர் இத்தலத்து முருகவேளுக்கு நான்கு பாடல்கள் அருளியுள்ளார்.

இந்த தலம் கூத்தப்பிரான் அம்பலங்கள் ஐந்தனுள் தலை சிறந்தது. இதுவே ரத்னசபை அல்லது மணிமன்றாகும். தில்லை கனகசபை, மதுரை வெள்ளியம்பலம், திருநெல்வேலி செப்பறை, திருக்குற்றாலம் சித்ரசபை. ஆலங்காட்டில் கூத்தப்பிரான் எண்தோள் வீசி நின்றாடும் பிரானாக விளங்குகின்றான். இடதுகாலை உயரத்தூக்கி ஆடுவதால் ஊர்த்வ தாண்டவமூர்த்தி யாகின்றான். மேல் நோக்கிய ஊர்த்வமுகமாகிய ஈசானமும், மேல்நோக்கிய திருவடியாகிய ஊர்த்வ தாண்டவ குஞ்சிதபாதமும் சிவபெருமானுக்கே உண்டு. ஊர்த்வ தாண்டவமூர்த்தம் சிவபெருமானுடைய அஷ்டாஷ்ட (64) மூர்த்தங்களுள் சிறந்தது. எல்லா



ஆலயங்களிலுமுள்ள எடுத்த பொற்பாத நிழலே ஆன்மாக்கள் அடைதற்குரிய பேறு. அப்பேற்றை அனுபவிக்கும் ஆன்மாவின் பேரின்ப நிலைக்கொரு பேரெல்லையுமில்லை என்பதை உலகமக்கள் அறிவதற்காக, ஆகாயத்தில் உயரத் தூக்கப்பெறுகிறதே ஊர்த்வ தாண்டவத்தின் உட்கருத்து. புராணவரலாற்றை ஒட்டி, குழை நக்கும் பிஞ்ஞகன் கூத்து, காளியைத் தோல்வியுற ஆடிய கூத்து முதலிய விவரங்களும் கூறப்படுகின்றன. ஆலங்காட்டப்பன் தாண்டவத்திற்கே "மாநடனம்" என்று பெயர். இதையே காரைக்காலம்மையார் புராணம் 61-ம் பாடல் கூறுகின்றது. இம்மாநடனம் செய்பவனே தில்லைக் கூத்தனாகவும் இருப்பன் என்பதை மனத்துட் கொண்டே, சேக்கிழார் பெருமான் "ஊனடைந்த உடம்பின்" எனும் தொடக்கச் செய்யுளில் "தில்லையுள் மாநடஞ்செய் வரதர்" என்று நயம்படக் கூறுகிறார்.

காரைக்காலம்மையார் தலையால் நடந்து சென்று தரிசித்த தலத்தைத் தாம் காலால் நடந்து தரிசித்தல் அடாது என்று, திருஞானசம்பந்தர் ஊருக்குப் புறம்பேயிருந்து தரிசிக்கக் கருத, அன்றிரவு உறங்கும்போது ஆலங்காட்டப்பன் கனவிலே வந்து, "நம்மை அயர்த்தனையோ பாடுதற்கு" என்று நினைவூட்டினான். அடுத்தநாள் திருக்கோயில் சென்று, வேலைவிடம் உண்டவர்தம் கருணைபோற்றி மெய் உருகித்திருப்பதிகம் விளம்பலுற்றார். "துஞ்சவருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப்போய் நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரும்......ஆலங்காட்டெம் அடிகளே" என்பது முதற் பாசுரம். பாட்டின் கடைசிச் சொற்களை முதலில் மாற்றிவைத்துப் பொருள் சொல்வதற்குத் தமிழிலக்கணத்தில் "பூட்டுவிற்பொருள்கோள்" என்று பெயர். ஒரு வில்லின் இருகோடிகளையும் நாணினால் பூட்டிச் சேர்த்து அம்பு கோக்கிறதை ஒட்டிய பெயர் இது. இம்முறையில் "ஆலங்காட்டெம் அடிகளே துஞ்ச வருவாரும், தொழுவிப்பாரும் வழுவிப்போய், நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரும்" என்று அந்வயம் செய்யவேண்டும். "வழுவிப்போய்த்துஞ்ச வருவாரும் (நான் துஞ்ச), (என்) நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரும், தொழுவிப்பாரும்—" பொருள் வெளிப்படையென்றே சொல்லத்தகும். அடுத்து இரண்டடிகளில்

“முனைநட்பாய் வஞ்சப் படுத்தொருத்தி வாழ்நாள் கொள்ளும் வகை கேட்டு அஞ்சும் பழையனூர்” என்பதில் நீலி வரலாறும், சபதம் செய்த எழுபது வேளாளர் உயிர் கொடுத்து உறுதிகாத்த வரலாறும் கூறப்படுகின்றன. இவ்வெழுபதின்மர் குழுவின் வழி வந்தவர்களை இன்றும் பழையனூரில் காணலாம். குழுவாண்டார் கோத்திரம் என்பது, பல நூற்றாண்டுகளின் சிதைவால் உருமாறி, இன்று கூழாண்டார் கோத்திரம் எனப்படுகின்றது. திருநாவுக்கரசர் தேவாரத்தில் 4820 ம் பாசுரத்தில் “எண்தோளர்” எனும் குறிப்பும்,” 4824-ம் பாசுரத்தில் “ஆடினார் காளிகாண ஆலங்காட் டடிகளாரே” எனும் குறிப்பும், “திண்தோள்கள் எட்டும் உடையார் தாமே” என்று 7023-ம் பாசுரத்திலுள்ள குறிப்பும், தாண்டக வேந்தர் தாண்டவ வேந்தனை அனுபவித்த வகையைக் கூறும். இவ்விரு பதிகங்களில் பற்பல சாத்திரக் கருத்துக்கள் நிரம்பியுள்ளன. சுந்தரமூர்த்தி சுவாமிகள், “முத்தா முத்திதர வல்ல” எனத்தொடங்கும் பதிகம் அருளினார். இப்பதிகத்தில் இறைவனை “அத்தா, முத்தா, சித்தா, பத்தா, ஐயா, அறிவே, அண்ணா, அண்டா, அம்மா” என்றழைக்கும் உறவுகளை ஆழ்ந்து சிந்தித்தால் நமக்கு நிரம்ப ஆன்மவிளக்கம் ஏற்படும்.

இப்பதிகத்தின் முதற்பாசுரம் மிகமிக அருமையானது. சிவபரத்வத்தைப் பற்றிய நுட்பமான கருத்துக்களையெல்லாம் இதிற்காணலாம். தொடக்கச்சொல் முத்தா என்பது. முத்தன் = முக்தன் = பற்றற்றவன். “பற்றுக பற்றற்றான் பற்றினை” என்று திருக்குறள் கூறும் தகுதியுடையவன். இவன் நிலையே முத்திநிலை, பேரின்பநிலை, செத்து செத்துப் பிறக்கும் ஏனைய கடவுளர் நிலைகளையெல்லாம் உபசாரமாகப் பதமுத்தி என்று சைவம் கூறும். பரமுத்திக்கும் பதமுத்திக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாடுண்டு. பரமுத்தியை அனுபவிக்காதவன் அதைப் பிறர்க்குத் தர இயலாது. “முத்திதர வல்ல” என்பதிலுள்ள வல்லமை சிவபெருமானுக்கே உரித்தான தனிச்சிறப்பு. சிவபெருமான் திருநாமங்களுள் ஒன்று “போகமோக்ஷப்ரதாயக:” என்பது. முத்தியை ஆன்மாக்களுக்கு இறைவன் தருவதும் அவனுடைய கருணையாலே



தவிர, நாம் செய்கிற வழிபாடு முயற்சி முதலியவைகளின் பலனாக அன்று. அவன் கருணையும் உமாதேவியாரின் சேர்க்கையால் வருவது. இதையே “முகிழ்மென் முலையாள் உமைபங்கா” என்பது தெரிவிக்கிறது. “சித்தா சித்தித் திறம்காட்டும் சிவனே” என்ற இடத்தில், பற்பல புராண வரலாறுகள் மூலமாகச் சிவபெருமான் பேராற்றல் பெருங்கருணை முதலியன நினைவுறுத்தப் பெற்றுள்ளன. “தேவர் சிங்கமே”—தேவதேவன், மஹாதேவன், தேவாதிதேவன் முதலியவற்றால் கூறப்படும் பெருமையே தேவர்சிங்கமே என்பதிலும் விளங்கும். இத்தலத்து வேளாளப் பழங்குடி மக்கள் தேவாரப்பயிற்சி நிரம்பியவர்கள், தங்கள் பிள்ளைகட்குத் “தேவர்சிங்கம்” எனும் பெயரை வைக்கிறார்கள்.

“பத்தா” என்பதில் பல நல்ல கருத்துக்களுண்டு. பத்த தசை முத்த தசைக்கு நேர்மாறானது. முத்த தசையிலிருப்பவன், தனது பேறாக விரும்பி, பத்த தசையை வேண்டிப் பெற்று, பற்பல தொண்டுகள் செய்வன். சிவஞானபோத இறுதிச் சூத்திரத்தில் முக்தர்கள் அறிவு இச்சை தொழில்கள் நிகழுமிடம் இன்னதென்பதை, மாதவச் சிவஞானயோகிகள் விளக்குவதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். இறைவன் சிறந்த உயிர்களோடு கலந்து பரிமாறி அருள் புரிகிற வரலாறுகள் எண்ணிறந்தன. பிட்டுக்கு மண்சுமப்பன், அடிவாங்கிப் புண்சுமப்பன், நள்ளிரவில் புலவிதீர்க்க ஒரு முறைக்கிருமுறை தூது செல்வன், விறகுக்கட்டுகளைத் தலையிற் சுமப்பன். மேன்மையோடு நீர்மையும் உடையவனே பெருங்கடவுள் என்பதைப் பல சமயங்கள் ஒப்புக் கொள்கின்றன.

“பத்தா” என்பதை பக்தா என்பதன் திரிபாகக் கொண்டு, சிறந்த பக்தியுடையவன் என்றும் கூறலாம். தனக்குத்தானே பக்தி செலுத்துவதோடு நில்லாமல், உமை முருகர் கணபதி முதலியோரையும், அரி. அயன் முதலிய தேவர்களையும தன்னிடத்தில் பக்தி செலுத்தும்படிச் செய்து, மக்களாகிய நாமும் அவனிடம் பக்தி செலுத்தப் பாடங்கற்பிக்கிறான். தன்னைத்தானே பக்தியோடு வழிபட்டது திருஐயாற்றில் சித்திரைப் பெருவிழாவில் ஒரு நாளில் “ஆத்ம பூஜை” என்று கொண்டாடப் பெறுகின்றது.

உமை பூசித்தது கச்சியேகம்பம், திருமயிலை முதலிய பல தலங்களில் பிரசித்தம். முருகவேள் பூசித்தது வைத்தீசுவரன்கோயில், கீழ்வேளூர், பெருவேளூர் முதலிய தலங்களிலும், கணபதி பூசித்தது கணபதீச்சரம் முதலிய தலங்களிலும். திருமால் வழிபட்டது திருவீழிமிழலை திருமாற்பேறு இராமேச்சரம் முதலியவற்றிலும் ஏனையோர் வழிபட்டமை வேறு பற்பல தலங்களிலும் பல புராணங்கள் வாயிலாகக் கூறப்பட்டுள்ளன.

எனவே முத்தன், முத்திதர வல்லவன், தேவர்சிங்கம் முதலிய பெயர்களால் அறியத்தக்கவனையே "பரமா" என்று புகழ்தல் தகும். இத்தகைய பெருங்கடவுள் நமக்குத் தந்தையாக இருந்து எல்லா உதவிகளையும் செய்வதால் "அத்தா ஆலங்காடா" எனப்படுகிறான். இவனுக்கு அடிமை செய்வதோடு இவன் அடியார்கட்கு அடியானாகத் தொண்டு செய்வதே தொண்டின் மேன்மைக்கறிகுறியாகும். இப்பதிகத்திலுள்ள 9-ம் பாசுரத்தில் "எம்மான் எந்தை மூத்தப்பன் ஏழேழ்படிகால் எமையாண்ட பெம்மான்" என்று, இறைவனுக்கு அடிமையானது வாழையடி வாழையாக வருகிற மரபாகும். மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத் தீதில் திருத்தொண்டத்தொகை அருளுவதற்கென்றே விண்ணிலிருந்து வந்த நம்பியாரூரர். பல இடங்களில் இதை வற்புறுத்துவதுள், இத்தலத்துப் பாசுரங்களும் சிறந்தவையாகும். இத்தகைய பல செம்பொருள்களை இரத்தினங்களாகப் பதித்துள்ள இரத்தின சபாபதிப்பதிகங்களாகின்ற இத்தலத் தேவாரங்களை இங்குள்ளார் அனைவரும் நாடோறும் ஓதி எல்லா நன்மைகளும் பெறுக. "எண்தோள்வீசி நின்றாடும் பிரான் தன்னைக் கண்காள் காண்மின்களோ."*

---

*தலபுராணத்தையொட்டி முஞ்சிகேசமுனிவர், கார்க்கோடமுனிவர் அருள்பெற்றமையும்; கல்வெட்டுக் குறிப்புகளையொட்டி, இத்தலத்திருக்கோயிலுக்குக் கங்கைகொண்ட சோழன் நிலதானம் செய்த செப்பேட்டுப்பட்டய விபரங்களும் போதின்மையால் சொற்பொழிவில் இடம்பெற்றில. முக்கியமாக இச்செப்பேட்டில் கோயில் தென்னை பனைமரங்களில் கள் இறக்கக்கூடாது என்ற நிபந்தனை அக்காலத்திய மதுவிலக்குக் கொள்கையை வற்புறுத்தும். (ஈழவர் ஏறப் பெறாதாகவும் எனும் குறிப்பு.)

# இன்பமும் துன்பமும்

அ. கு. காமாக்ஷியம்மையார் எம். ஏ.

ஆணும் பெண்ணும் நன்மக்களோடு சுற்றம் சுட்டும் புடைசூழ வாழும் வாழ்க்கையில் இரவும் பகலும் போல் இன்ப துன்பங்கள் நிறைந்தே காணும். இன்ப துன்பத்தை விளக்கப் போனால் ஒன்றன் இன்மையே மற்றதன் இருப்பு என்றுங் கூறலாம். "இன்போ ரணுவாம் இடர்அதற்கு மாமலையாம்" என்று வாழ்வில் இன்பத்தைவிட துன்பமே பெரிது என்பர் ஒரு சாரார் "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்பது மற்றோர் மனப்பான்மை. எனவே இன்ப துன்பங்களும் அவரவர் மனோநிலைக் கேற்றவாறு மாறுகின்றன. ஒருவர்க்கு இன்பம் மற்றொருவர்க்குத் துன்பமாய்த் தோன்றுவதுமுண்டு. வயிறார உண்பது, வாயாரப் பேசுவது, கண்ணாரக் காண்பது, காதாரக் கேட்பது, உளமார உடுப்பது, மெய்யாரத் துய்ப்பது ஆகிய இவற்றையே பேரின்பமெனக் கருதுவார் பலர். இவற்றையே இந்திரியாத்மவாதம், லோகாயதம் போன்ற பெயர்களால் நம் சைவ சமய நூல்களும் குறிக்கும், இன்னும் சற்று உயர்ந்தோர் கலையின்பமே நிலையின்பம் என்று, இலக்கியம், இன்னிசை முதலியவைகளில் பேரின்பங் காண்பர். ஓமர்காயம் என்ற பாரசீகக் காவியத்தில் உமறுப் புலவர் இதனையே பேரின்பவீடு என்றே பெரிதும் புகழ்வர்.

"வெய்யிற் கேற்ற நிழலுண்டு வீசுந் தென்றற் காற்றுண்டு
கையிற்கம்பன் கவியுண்டு கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வ கீதம் பலவுண்டு தெரிந்து பாட நீயுண்டு
வையந் தருமிவ் வனமின்றி வாழும் சொர்க்கம் வேறுண்டோ."

(இது "கவிமணி"யின் மொழிபெயர்ப்பு. மூலத்தில் இலக்கிய கீதம் என்றிருப்பதைத் "தெய்வ கீதம்" என்று "கவிமணி" யவர்கள் மெருகிட்டுள்ளனர்.) இவர்களினும் உயர்ந்த சான்றோர் சிலர் தன்னலமற்றுப் பிறர் நலம் பேணும் பெருந் தொண்டிலே பேரின்பங் காண்பர்.

அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே (தாயுமானவர்)

இறைவனது அடியவரோ இறைபணி நின்று அவன் இன்னருளைப் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்வதிலே பேரின்பங் கண்டனர்.

" துன்பம் நும்மைத் தொழாத நாட்கள்
இன்பம் நும்மை ஏத்து நாட்கள் (அப்பர்)

இன்ப துன்பங்களாகிய பண்புகள் பல்வகை மெய்ப்பாடுகளால் அறியப்படும். இன்பத்தின் அறிகுறிகளாக முகமலர்ச்சி, உடல் வளர்ச்சி, புன்முறுவல், முறுவல், புன்சிரிப்பு, சிரிப்பு, பெருஞ்சிரிப்பு, ஆகியவைகளும்; துன்பத்திற்கு அறிகுறிகளாக முகவாட்டம், உடற்சோர்வு, உடல் மெலிவு, நெட்டுயிர்ப்பு, கண்ணீர், கம்பலை முதலியவைகளும் குறிக்கப்பெறும்.

இன்பம் வருங்கால் திளைத்து மகிழ்தலும், துன்பம் வருங்கால் வாடிவருந்துவதும் உலகத்தியற்கை. எனவேதான் இன்பத்தைவிட துன்பமே வாழ்க்கையில் மிகும்போது மனமுடைந்து, உடல் நலிந்து வாழ்நாட்களையே குறைத்துக் கொள்வோருமுண்டு. துன்பம் நீக்கி இன்பம் விழைவதே மக்களியல்பு. ஆகையால் துயரைத் துடைக்குமுன், அதன் தோற்றக் காரணத்தையும் பலவாற்றான் ஆராய்ந்தனர்.

" அவா இல்லார்க் கில்லாகும் துன்பம் அஃதுண்டேல்
தவா அது மேன்மேல் வரும்,"

" இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின் "

பொருள்களின் மீதுள்ள பேரவா நிறைவேறாத போதெல்லாம் துன்பம் வந்துறுத்தும். எனவே அவாவின் காரியமாகவே துன்பம் பிறக்கிறது. நம் பழவினை காரணமாக இன்ப துன்பங்கள் தோன்றுகின்றன எனும் அருங் கருத்தைப் புறநானூற்றுப் பாட்டொன்று



" தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன "

என்று அழகாய்க் கூறும்.

" இன்பம் இடரென்றி ரண்டுற வைத்தது
முன்பு அவர் செய்கையினால் முடிந்தது "

என்று திருமூலரும் கூறுவர். இக்கொள்கைதான் துன்பங்களைத் தாங்குவதற்குப் பெரிதும் துணைபுரிவது.

இவ்வாறு பல காரணங்களால், தோன்றும் துன்பத்தைத் துடைக்கும் வழியினையும் ஆன்றோர் காட்டிச் சென்றனர்.

இன்பம் வருங்கால் அளவுக்குமீறி திளைப்பவன் துன்பம் வருங்கால் அளவுக்குமீறி மனமுடைவதும் இயல்பு. எனவே இன்பம் வருங்கால் அதனைப் பெரிதாய்ப் போற்றாதவர் துன்பத்தின் சுமையையும் பொருட்படுத்தார் எனுமோர் நெறியினை வள்ளுவர் வகுத்துக் காட்டுவர்.

" இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன் "

இதனை மேற்குறித்த புறப்பாட்டும் (192-புறம்) வற்புறுத்தும்.

" இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே "

இதனையே இருவினை யொப்பு என நம் சைவ நூல்களும் குறிக்கும்.

இன்ப துன்பங்களெல்லாம் மனத் தோற்றங்களேயன்றி வேறல்ல. " எல்லாவற்றிற்கும் மனமே காரணம் " எனும் முதுமொழியும் இதனை விளக்கும். இன்பத்தின் இருப்பிடமான வீடும் (மோக்ஷமும்) துன்பத்தின் உறைவிடமான அளறும் (நரகமும்) கூட மனத் தோற்றங்களேயன்றித் தனியிடங்களல்ல. இவற்றை இம்மண்மீதே காண்கிறோம் என்பதனை

" கண்டின்று வீடுற்றேன் "

என்ற மணிவாசகமும் குறிக்கும். எனவே துன்பத்தை நீக்கிக் கொள்ளும் மருந்து மனத்திலேதான் உள்ளது. பெருந்துன்பம் அடைந்தபோதும், அதற்கு நாம் அஞ்சாது எதிர்க்கும் மனோதிடம் பெறவேண்டும்.

> " இடுக்கண் வருங்கால் நகுக அதனை
> அடுத்தூர்வது அஃதொப்ப தில் "

என்ற குறட்பாவில் 'அடுத்து ஊர்வது' என்பதற்குப் பாமரமக்கள் பேச்சிலேயே பொருள்காணின் " ஏறி சவாரி செய்வது" என்றே கூறலாம். துன்பத்தை அடக்கி ஆள்வது அதைக் கண்டு அஞ்சாது சிரிப்பதேயாகும் என்பது வள்ளுவர் கருத்து. 'வருங்கால்' என்ற சொல் உய்த்துணரற்பாலது. துன்பம் வரும்போதும் கவலையுறக் கூடாது என்றால் வருமுன்னரே ஏங்குவாரைப்பற்றி என் சொல்வது? இன்னும் வருவதாகக் கூறப்பெறும் துன்பத்தின் கவலையை ஆரூடம், ஜோதிடம் முதலியவற்றின் மூலமாக அரும்பொருள் கொடுத்து முன்னதாகவே வாங்குவாரைப் பற்றி என்னதான் கூறுவது? அச்சம் போன்ற ஆட்கொல்லி மக்களுக்கு வேறுகிடையாது. அஞ்சாநெஞ்சம் படைத்தோர்க்கு யமன் ஒரு முறையே வருகிறான். எதற்கெடுத்தாலும் அஞ்சுபவர்க்கோ ஆயிர முறை வருவான்; அன்றாடச் சாவுதான். (Cowards die many a time) " அஞ்சி யஞ்சிச் சாவார் " என்று கூறுவர் பாரதியாரும்.

> " அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்சவருவது மில்லை "

என்றார் அப்பர் பெருமான். அவ்வரிய பண்பினை வாழ்க்கையில் நடைமுறையிலுங் காட்டியதையும் அறிவோம். நீற்றறையில் இடப்படுவதை நினைத்தாலும் நடுங்குமே நம் உள்ளம். அதனை நளினமிக்க குளிர்ந்த இடமாகக் கண்ட அப்பெருந்தகையின் உள்ளத்திண்மைதான் என்னே!

> " வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
> உள்ளத்தின் உள்ளக் கெடின் "

என்ற பொய்யாமொழியை மெய்யாக்கினார். இதனையே ஆங்கிலக்கவிஞர்—கண்ணிழந்து காணுமையாந் துன்பக்



கடலைக் கண்டும், இன்பமே கண்ட புலவர் மில்டன் "இழந்த சொர்க்கம்" என்ற தன் அரிய நூலில், " மனமே வீடும் நரகும். அது சொர்க்கத்தை நரகமாக்கும். நரகை சொர்க்கமாக்கும்" எனக் கூறினார். (The mind is its own place, and in itself, can make a heaven of hell, and hell of heaven"—Paradise Lost-Book I, lines 253, 254.) இவ்வகையில் நம் மனதை மட்டும் பண்படுத்தி விட்டால், துன்பத்தைத் துடைத்து விடலாம். ஆனால் இது எல்லோரும் எளிதிற் பெறும் இயல்பன்று. இதனை எளிதாகப் பெறும் வழி ஒன்றே ஒன்று தான். நமக்குற்ற துன்பத்தினை நண்பரொருவரிடம் கூறிக்கொண்டாலே சற்றுக்குறைவதை உணர்வோம். அழுது ஆற்றிக் கொள்வோரும் உண்டு. அனைத்துயிர்களின் துயரச்சுமை தாங்கியான இறைவன், உறுதுணையாய் நிற்கின்றான். இன்ப துன்பமில்லாத இறைவன், நாம் நம்பிச் சுமத்தினால் விரும்பி ஏற்கிறான் நம் துன்பங்களையும். இது பற்றியே

> " இன்பமுந்துன்பமும் இல்லானே உள்ளானே "

என்று மணிவாசகர் இறைவனியல்பைக் குறித்தார். அனைத்தும் அவன் செயலே யென்று அவனிடம் முறையிடுவர் அடியவர். ஆற்றற்கரிய துன்பம் நேரினும் போற்றற்குரிய பெருஞ்சோதனை என்று ஏற்றனர். இதனைப் பெரிய புராணம் பெரிதும் விளக்கும்.

> " இடர்தனைக் கழிக்கவேண்டில் இறைவனை எத்துமின்னோ "
>
> (அப்பர்)

துன்பத்திலும் இன்பம் நுகர இயலும். முத்தமிழின் முக்கூறுகளிலும், இன்பத்தைவிட துன்பத்தையே மக்கள் விரும்புகின்றனர். துன்பத்தைப் படம் பிடித்துக்காட்டும் இலக்கியங்களே நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். சோகப்பாடல்களே நெஞ்சத்தை நெகிழ்விக்கும். இரக்கம் மிக்க நாடகங்களே இதயத்தைத் தொடுகின்றன. இவ்வாறு பிறர் துன்பங் கண்டு இரங்குவதால், நம் துன்பந் தாங்க வல்ல ஆற்றலையும், நம் துன்பங்களை நுகர நுகரப் பிறர் துன்பங் கண்டிரங்கும் பண்பையும் பெறுகின்றோம். இது பற்றியே ஆன்றோர் இல்லாத துன்பத்தையும் தாமே வருந்

த்தேடிக் கொள்வர். அரசைத் துறந்து ஆண்டியான புத்தர் பெருமான் இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டு. உண்ணாமை, உறங்காமை, புலனடக்கம் முதலியன பயின்று நோன்பு நோற்றனர் பெரியோர். (நோன்பு—என்ற சொல்லின் பகுதியான 'நோ' என்பதே 'வருந்து' எனப்பொருள் படும்.) இவ்வாறு தம் செயற்கையாலோ, இயற்கையாகவோ வரும் துன்பம் எனும் தீ சுடச்சுடப் பொன் போல் சான்றோருள்ளம் ஆன்ம ஒளி வீசுமென்பர் வள்ளுவர்.

" சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு "

உவமையின் சிறப்பும் உய்த்துணரற்பாலது. பொன்னெனும் உயர் பொருள் ஒன்றுதான், தீயில் மேன்மேலும் தூய்மைபெற்று விளக்கமுறும். ஏனைய இழி பொருள்களோ வெந்து சாம்பராகும். எனவே இறைபணி நின்று இடுக்கணழியாது. இன்னருளால் பொன்போன்ற உயர்ந்த உள்ளத்தை மட்டும் பெற்றுவிடின் துன்பத்திலும் இன்பங் காணலாம்.

" தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது "

---

# விருத்தாசலம்

சு. சுவாமிநாத தேசிகர்

காலமோ கோடைக்காலம். வேளையோ உச்சிவேளை. வெயில் கொளுத்த அதன் வெப்பம் தாங்கமுடியாமல் தள்ளாடிக்கொண்டு வருகிறார் ஒரு சிவனடியார்..

பசி காதடைக்கிறது நாவும் வறண்டு விடுகிறது அந்தோ! வழித்துணைக்குக் கூட ஒருவரும் இல்லையே அந்த பழமலைநாதரின் ஆலயம் இன்னும் எத்தனை தூரமோ அறி



யேன் என வருந்திக்கொண்டு ஆலயத்தை நாடி வந்து கொண்டிருக்கிறார்.

அதோ ஆலயத்தின் கோபுரம் தெரிகிறதே! பழமலை நாதரின் தரிசனத்தை அதிசீக்கிரத்தில் காண்போம் காண்போம் என்று மனம் மகிழ்ந்து உற்சாகத்துடன் விரைந்து சென்று அவ்வாலய வாயிலை அடைந்ததும் பசிக்கொடுமையால் இவ்வாலயத்தில் அமர்ந்துள்ள அம்பிகையைப் பார்த்து ஓ அம்பிகைக் கிழவியே! பசி மிகக் கொடுமையாக இருக்கிறது சோறு கொண்டுவா என்று பாடினார்.

அம்பிகையும் கிழவிரூபமாய் (விருத்தையாக) கையில் சோறும் தண்ணீரும் ஏந்தி அடியார் முன்வந்து சிவனடியாரை அன்புடன் உபசரித்துத் தான் கொணர்ந்த உணவை உண்டு களை தீருமாறு வேண்டுகிறார்.

நடுக்கடலில் விடப்பட்ட மனிதனுக்கு தெப்பக்கட்டை அகப்பட்டதுபோல் வந்த அம்பிகையின் அன்பை பெரிதும் மெச்சி அவர் ஈந்த சோற்றையும் தண்ணீரையும் அருந்தி பசியாற்றிக் கொண்டதும்; அம்பிகை சிவனடியாரைப் பார்த்து "என்னைக் கிழவியாகப் பாடினாயே" என்று கேட்க சிவனடியார் மறுபடியும் பால வடிவாகப் (பாலம்பிகையாக) பாடியதும் அம்பிகை மகிழ்ச்சியுற்று மறைந்து அருளினார். உடன் அச்சிவனடியார் பழமலை நாதரை தரிசித்துச் சென்றார்.

அச் சிவனடியார் வேறு யாருமில்லை. குகை நமசிவாயர் என்ற சிவனடியார்தான். அவர் பசியை யாற்றியதும் பக்தர்களை பாதுகாப்பவளான உமாதேவியாரே யாவர். தன் அடியாரின் வருத்தமறிந்து அம்பிகை உருவில் தோன்றி சோறும் தண்ணீரும் கொடுத்தருளிய வரலாறு விருத்தாசலத்தில் (திருமுதுகுன்றம்) எழுந்தருளியுள்ள விருத்தாம்பிகை, பாலாம்பிகை என்ற இரு அம்மையாரின் (இரு அம்பாளின்) வரலாறு எனக் கூறப்படுகிறது. (இவ்வாலயத்தில் விருத்தாம்பிகை பாலாம்பிகை என்ற இரு அம்மன் சந்நிதானங்களும் தனித்தனியே காணப்படுகின்றன.)

**இருப்பிடம்:**—இவ்வரும்பதி தென்னிந்திய இருப்புப் பாதையில் திருச்சி விழுப்புரத்திற்கு இடையில் விருத்தாசலம் என்ற பெயருடன் புகைவண்டி நிலையமாக அமைந்

துளது. புகைவண்டி நிலையத்திலிருந்து சுமார் ஒருமைல் தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

இத்தலம் தேவாரத்தில் திருமுதுகுன்றம் என்றே சொல்லப்படுகிறது. உலகத்திலுள்ள எல்லா மலைகளும் படைக்கப்படுவதன்கு முன்னர் இம்மலை சிவபெருமானால் படைக்கப் பட்டமையின் இத்தலத்திற்கு திருமுதுகுன்றம் என்று பெயர் வழங்கப்படுகிறது என்பதாம்.

**சுந்தரமூர்த்தி சுவாமிகள்:**—சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத் தலத்திலுள்ள சிவபெருமானை வணங்கி பொன் கொடுக்கும் படிவேண்டி,

*திருமுதுகுன்றம்-பண்-நட்டராகம்*

*" பொன்செய்த மேனியினீர் புலித்தோலை அரைக்கசைத்தீர்*
*முன்செய்த மூவெயிலும் எரித்தீர்முது குன்றமர்ந்தீர்*
*மின்செய்த நுண்ணிடையாள் பரவையிவள் தன்முகப்பே*
*என்செய்த வாறடிகேள் அடியேன் இட்டளங் கெடவே "*

*" உம்பரும் வானவரும் உடனே நிற்க வேயெனக்குச்*
*செம்பொன்னைத் தந்தருளித் திகழும்முது குன்றமர்ந்தீர்*
*வம்பமருங்குழலாள் பரவையிவள் வாடுகின்றாள்*
*எம்பெருமா னருளீர் அடியேனிட் டளங்கெடவே "*

என்னும் தேவாரத் திருப்பதிகம் பாடியதும் பழமலை நாதர் (சிவபெருமான்) அருள் கூர்ந்து சுந்தரருக்குப் பொன் கொடுத்தருளினார். அதனை சுந்தரமூர்த்தி சுவாமிகள் பழமலை நாதர் அருளால் மணிமுத்தாநதியில் போட்டுவிட்டு திருவாரூர் கமலாலயத்தில் எடுக்கச் சென்றார். முதலில் பொன்னைத் தேடிப்பார்த்துக் கிடைக்கவில்லை. பின்னர் விருத்தாசலத்தில் (திருமுதுகுன்றத்தில்) எழுந்தருளி யுள்ள பழமலை நாதரை நினைந்து,

*" எத்தா திருந்தறியேன் இமையோர்தனி நாயகனே*
*மூத்தா யுலகுக்கெல்லாம் முதுகுன்றம் அமர்ந்தவனே*
*பூத்தாருங் குழலாள் பரவையிவள் தன்முகப்பே*
*கூத்தா தந்தருளாய் கொடியேனிட் டளங்கெடவே "*

எனப் புகழ்ந்து பாடினார்.



இதனை சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தில் ஏ—134:—

*" எத்தாதே இருந்தறியேன் " எனுந்திருப்பாட் டெவ்வுலகும்*
*காத்தாடும் அம்பலத்துக் கண்ணுளனைக் கண்ணுதலைக் "*

*" கூத்தா ! தந்தருளாய் இக்கோமாளத்தின் முன் " என்று*
*நீத்தாருந் தொடர்வரிய* நெறிநின்றார் பரவுதலும்.*

உடனே கூத்தனார் திருவருளால் வந்தெழுந்த பொன் திரளை யெல்லாம் கரையேற்றி மச்சத்துடன் உரைத்துப் பார்க்க, மாற்று குறைய, வன்தொண்டர் மீண்டும் சிவ பெருமானைத் தொழுத அளவில், 'மெய் அன்பர் அன்பில் வரும் பாட்டு உவந்து கூத்து உவந்தார், முன்னைய மாற்றுக் குக் குறைபடாமல் காட்டுதலும், மகிழ்ந்து பொன் திரளை எடுத்துக்கொண்டு கரை ஏறினார். பிறகு பொன்னை எல் லாம் பரவையாரோடு அவர் மாளிகைக்கு அனுப்பிவிட்டுத் திருமூலட்டானத்தார் மலர்ப்பாதம் தொழுது, மிக்க மகிழ்ச்சியோடு பரவையாரோடு வாழ்ந்திருந்தார். (இச் சம்ப வத்தையே மேலும் சேக்கிழார்,)

*" அணியாரூர் மணிப்புற்றின் அமர்ந்தருளும் பரம்பொருளைப்*
*பணிவார் அங்கொருநாளிற் பாராட்டுந் திருப்பதிகம்*
*தணியாத ஆனந்தம் தலைசிறப்பத் தொண்டருடன்*
*துணிவாய பொருள்வினவித் தொழுதாடிப் பாடுவார் "*

*" பண்ணிறையும் வகை ' பாறுதாங்கி ' என எடுத்தருளி*
*உண்ணிறையும் மனக்களிப்பால் உறுபுளகம் மயிர்முகிழ்ப்பக்*
*கண்ணிறையும் புனல்பொழியக் கரை இகந்த ஆனந்தம்*
*எண்ணிறைந்த படிதோன்ற எத்திமகிழ்ந் தின்புற்றார் "* 2

என்பதாம். (பெ. ஏ. 140, 141.)

**சிறப்புகள்:**—இத்தலத்தில் இறப்பவர்களை யெல்லாம் பார்வதி தேவியார் தமது ஆடையினால் வீசி இளைப்பாற்ற, பரமசிவன் அவர்களுக்கு வலச் செவியில் பஞ்சாட்சர உப தேசம் செய்து அவர்களைத் தமதுருவமாக்குகின்றாராம். அதனால் இத்தலத்திற்கு விருத்தகாசி என்ற பெயரும் வழங் கப்படுகிற தென்பர். இவ்வரும்பதி காசியினுஞ் சிறந்த

---

*நெறி நின்றார் - திரு[illegible] நெறி[illegible]ன்றவரான நம்பி ஆரூரர்.

186905

தெனக் கந்தபுராணம் வழிநடைப் படலத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

“ தூசினு லம்மை வீசத் தொடையின்மேற் கிடத்திக் துஞ்சு
மாசிலா உயிர்கட் கெல்லா மஞ்செழுத் தியல்பு கூறி
யீசனே தனதுகோல மீந்திடு மியல்பா லந்தக்
காசியின் விழுமிதான முதுகுன்ற வரையுங் கண்டான் ” ௧

**மணிமுத்தாநதி:**—இவ்வாலயத்திற்கு வடபால் ஓடுகிற மணிமுத்தா நதியானது கெங்கைக்குச் சமமாதலால் இந்நதியில் ஹஸ்திகளைக் கொண்டுவந்து விடுகின்றனர். இம் மணிமுத்தாநதியானது தேவர்களும், முனிவர்களும் ஈசுவரத் தியானம் பண்ணிப் பொழிந்த ஆனந்தக் கண்ணீரே ஆறுகப் பெருகி மணிமுத்தாநதி என்னும் பெரிய தீர்த்தமாக அமைந்துள்ளது.

**திருவிழா:**—இவ்வாலயத்தில் பிரதி மாசி மாதம் தோறும் வரும் மாசிமகந்தான் பெருவிழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

**பாடல்கள்:**—இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள சிவ பெருமானைப் புகழ்ந்து திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் தேவாரப் பாடல்கள் பாடியுள்ளார்கள்.

**மூர்த்திகளின் பெருமை**·—இவ்வாலயத்திலுள்ள மூல சிவலிங்கப் பெருமானைத் தரிசித்தோர் உள்ளம் பரவசமடைவது திண்ணம்; சுவாமி சந்நிதானத்திற்கு வடபால் விருத்தாம்பிகை சந்நிதானமும் வடமேற்கு மூலையில் பாலாம்பிகை சந்நிதானமும் அமைந்துள்ளன; இவ்வாலய சந்நிதானத்திற்கு தென்கிழக்கு மூலையில் பூமியின் அடியில் ஆழ்ந்தாழ்ந்த விநாயகருடைய ஆலயம் மிக அழகாக அமைந்துள்ளது; இவ்வாலய உட்பிரகாரத்தில் சுவாமி சந்நிதானத்திற்கு தென் கிழக்குமூலையில் தலமரமாகிய வன்னிமரம் இருக்கிறது. இவ்வாலயத்தில் ஏனைய பரிவார மூர்த்திகளின் திரு உருவங்களும் இருக்கின்றன.

**திருநாமங்கள்:**—சுவாமி–பழமலைநாதர்; தேவியார்–விருத்தாம்பிகை; பாலாம்பிகை; தலமரம்–வன்னி; தீர்த்தம்–மணிமுத்தாநதி.

உ

சிவமயம்

குஹப்ரஹ்மணேநம:

திருச்சிற்றம்பலம்

# சிவஞான தீபம்

## காப்பு

### குறள்வெண்செந்துறை

பொன்விசும் பிந்திரன் புதல்வியை வேட்டோன்
மன்னுடம் பிடியனொண் மலரடி தொழுவாம். (௧)

### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

ஐயமா லில்லா வேத வையனு யமல வோத்தின்
மெய்யனு யாதி மூல விந்துவாய் நாத மாய்நந்
தெய்வமாய் விளங்கு மாறு சென்னியோங் குகனை யைந்து
கையனுர்க் கிளைய கந்தக் கடவுளைக் கருத்தில் வைப்பாம்.

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

பொறுமைநிசம் புண்ணியங்கள் விரதம் யாகம்
பொருந்தினர்க்கும் வருந்தினர்க்கும் போக யோகம்
நிறுவுநிலை யுறுபவர்க்கு நீதி ஞான
நிகழ்பவர்க்கு மருளிசைக்கு நேய மாகி
இறுதிபவ கம்பலைக ளெவையு நூறி
யென்னுளத்தி லுவகையுடன் விளங்கா நிற்கும்
அறுமுகவ சிவசாமி யென்றன் றீர்த்த
னவனிறைவ னுபயவடி யகத்துள் வைத்தேன். (௨)

## பாயிரம்

### நூற்பயன்

பவமான கடல்கடக்க முயலா திங்கே
பதைபதைத்தே யுழலுகின்ற கலுடச் சீவர்
அவமான விருண்மறைக்கக் கிடக்குந் தம்மை
யறிந்துய்வா னவ்விருளை யகற்று நிற்குஞ்

சிவஞான தீபமிதைப் படித்தோர் கேட்டோர்
செப்பினவர் சிந்தைதனிற் பதித்தோர் மேலாந்
தவமான நோன்பெல்லா முடித்தோ ராவார்
சண்முகவே ளருளினிது சாற்றி னேனே. (௧)

### ஆக்கியோன் பெயர்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்*

ஈறுநடு வாதிகளு ளேதுமணை யாமலே
யென்றுமுள பரனளித்த
மாறுதல் கொளாதநன் ஞான்மறையி னுட்பமாய்
மருவுமுப நிடதமடுவில்
ஊறுமதி சாரமதை யுண்டுமுதி யோர்களு
முரைத்தவழி பேறுழைந்து
கூறினவ னிந்நூலை யுலகுணர்ந் துய்யவே
குமரகுரு தாசன்மாதோ. (௨)

---

# நூல்

## முதலாவது

## பதிபசுபாசவியல்

### வசனம்

சருவ அண்ட பிண்ட சராசரங்கட்கும் ஆதி பிதாவாய் வயங்கும் ஈசனொருவன் என்றும் நித்தியனாயுளன். அவன் அனாதியெனப்படுவன் : பரிசுத்தமுடையவன் : பரிசுத்தஞானமுடையவன் : வேதாகமாதி நூல்களாற் றுதிக்கப்பட்டவன் : சமான ரகிதன். சத்து, சித்து, ஆனந்தமென்னு மூன்றையு மொருங்கே பொருந்தி நாம ரூப பேதங்களாயுள்ள சமத்த சராசரங்களினுஞ் சச்சிதானந்த சொரூபமென நிறைந்த பொருளு மவனே. அவனே பரம சிவம் என்னும் பரமான்மா; பிரமம். அவனே பதி. அவனே குகன்.

சருவ புவனங்கட்கும் அவன் ஒரே தெய்வமாயுளனென்பதற்கும், ஒரு ஞானியினுடைய சுவானுபூதியிற் சகலசராசரமுமறையச் சிதாகாச சோதியொன்றே தோன்றுதலும், அவசியமான நிக்கிரக அனுக்கிரகாதி அற்புதங்கள் அந்த ஞானியகத்து நிகழ்தலும், இவைகள் அந்த ஞானி போல்வார்க்கெல்லாம் விகற்பின்றி எய்தலுந் தக்க ஏதுக்களாம்.

ஆன்மாக்க ளனந்தம் : அவை, பசுவென்னுமொரு சொல்லிலடங்கும். ஆன்மா, பாசத்திற் கட்டுண்டமையாற் பசுவெனப்பட்டது. அதற்கே—அகர்த்தா, அணு, சீவான்மா, சுதந்திரஈனன், கிஞ்சிஞ்ஞன், சிதாபாசன், பாசி, புருடன், புமான், சேதனன், ஆதன், இயமானன், உயிர், ஆவி, புத்தி, பிராணன், சதசத்து, புற்கலன், தேகி யென்னும பெயர்களுளவென்று நூல்க ணுவலும். இச்சீவான்மா, அனாதி நித்தியப்பொருளென்று மவை கூறும்.

மேலே சொன்ன அனாதி நித்திய பரமான்மாவென்னுமொரு சூரியனுடைய விம்பமே உயிர்களினுள்ளிடங்களென்னுங் கட சலங்கடோறுந் தோன்றுகிற பிரதி விம்பங்களாகும். அந்த விம்பத்தை அந்தரியாமி யென்னலாம். அது, தெளிவான சலத்திலேயே தெளிவாகக் காணப்படுமாகலின் அந்தகார அஞ்ஞான ஆன்மா அதனைத் தரிசியாது; ஞானவிழியான்மா தரிசிக்கும். அந்தரியாமிக்கு, அக்கடமே தூலசரீரமும் அச்சலமே சூக்கும சரீரமுமாம். சூரியவிம்பந் தோன்றுகின்ற கடசலங்களு ளொன்று கசுமாலமாயின், எல்லாக் கடசலங்களு மங்ஙனமாதலில. அவ்வாறே, ஒருயிர்க்குள்ள சுக துக்கங்கள் ஒருயிர்க்கில. எல்லாக் கடசலங்களுங் கெட்டுப்போயினும் விம்பசூரியன் கெடுதலின்று. அவ்வாறே, உயிர்கட்குள்ள சுக துக்கங்கள் அந்தரியாமித்துவ பரமான்மாவுக்கில்லை.

பரமான்மாவாகிய பரமசிவன், ஆன்மாக்களினைசயிருந்தவாறு சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்

*இவ்விருத்தத்தின் அடிகளிலுள்ள ஈற்றுச்சீர்களை இரண்டிரண்டு மாஞ்சீர்களாகப் பிரிப்போர், எழுசீர் விருத்தமெனவுங் கூறுப. யாப்பிலக்கிய நூலாகவுமுள்ள திருவலங்கற் றிரட்டின் உ-ஆங் காண்டங் காண்க.

கிரகமென்னு மைம்பெருந் தொழில்களையும் பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவனென்னு மைவர்களுள்ளுமிருந்து சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயையென்னும் முதற்காரணங்கண் மூன்றையுங்கொண்டு செய்வன். பிரமா முதலிய ஐவரு ளின்று அஞ்செழுத்தென நின்று செய்தலைத் தன்மையென்றும், அவன் அவள் அஃதாஞ் சேதனப்பிரபஞ்சத்தி னின்று செய்தலை முன்னிலையென்றும், பஞ்சபூதாதி மூர்த்தங்களி னின்று செய்தலைப் படர்க்கையென்றும் பகரலாம். பிரமாமுதலிய நான்குமேனியும் உருவமெனவும், சதாசிவமேனி உருவமு மருவமு மெனவும், இவ்வைந்திற்கும் மேலதாயுள்ள குடிலைப்பாம் அருவமெனவும் விளம்பப்படும். அருவம் இரகசியமாம். இந்தஆறும் பிரசன்னமாக நிற்குமூர்த்தியை அறுமுகச்சிவ னெனவும், அருவம் அருவமேயாக மற்றைந்தோடும் பிரசன்னமாய் நிற்கும் மூர்த்தியை ஐம்முகச்சிவ னெனவுங் கூறலாம். ஒருவனுக்கு விழிகளிரண்டாயிலும் அவை, காண்டொழிலி னுடங்கியைந் தொன்றாய்க் "கண்" எனவே நிற்குமாறு போல அவ்விரு மூர்த்திகளு மொருசிவ னெனவே நிற்றல் ஈங்குணரக் கிடக்குமுண்மை யென்க. நிற்க.

அச்சிவனுடைய இலீலா விக்கிரங்கள் பலவற்றுள்ளும் இலிங்கம், இலிங்கோற்பவம், முகலிங்கம், சதாசிவம், மகாசதாசிவம், உமாமகேசுவரம், சுகாசனம், உமேசம், சோமாஸ்கந்தம், சந்திரசேகரம், விருஷபாரூடம், விருஷபாந்திகம், புஜங்க லளிதம், புஜங்கத்திராசம், சந்தியாநிருத்தம், சதாநிருத்தம், காளிதாண்டவம், கங்காதரம், கங்காவிஸர்ஜநம், திரிபுராந்தகம், கலியாணசுந்தரம், அர்த்தநாரீசுவரம், கஜயுத்தம், ஸ்வராபக்நம், சார்த்தூலஹரி, பாசுபதம், கங்காளம், கேசவார்த்தம், பிக்ஷாடநம், சிம்ஹக்நம், சண்டேசாநுக்கிரகம், தக்ஷிணாமூர்த்தம், யோக தக்ஷிணாமூர்த்தம், வீணாதக்ஷிணாமூர்த்தம், காலாந்தகம், காமாரி, இலகுளீசுவரம், பைரவம், ஆபதோத்தாரணம், வடுகம், க்ஷேத்திரபாலகம், வீரபத்திரம், அகோராஸ்த்ரம், தக்ஷயக்ஞஹதம், கிராதம், குருமூர்த்தம், அசுவாரூடம், கஜாந்திகம், ஜலந்தரவதம், ஏக பாதத்திரிமூர்த்தம், திரிமூர்த்தித்திரிபாதம், ஏகபாதம், கௌரீவரப்பிரதம், சக்ரதாநஸ்வரூபம், கௌரீலீலாஸமந்விதம், விஷாபஹரணம், கருடாந்திகம், பிரம சிரச்சேதம், கூர்ம ஸம்ஹாரம், மச்சாரி, வராஹாரி, பிரார்த்தநாமூர்த்தம், ரக்தபிக்ஷாப்ரதாநம், சிஷ்யபாவம் என்னும் அறுபத்து நான்கும் அட்டாட்டமூர்த்தங்க ளெனப்படும்.



இவ்வாறாய சருவேசுவரனுக்குத் தூலவடிவமாயுள்ள சருவப்பிரபஞ்சமுந் தூல வுடம்பாகும். சூக்கும வடிவாயுள்ள சருவப்பிரபஞ்சமுஞ் சூக்கும வுடம்பாகும். இவை, மாவிசுவரூபமென்றும், பாரமேசுவர வடிவமென்றும் பகரப்படும். ஆகாசத்திற் புகை யணுக்கள், தங்குதல்போல இத்தகைய அண்ட பிண்ட சராசரப் பிரபஞ்ச நாயகனுடைய அற்புதாகாச சத்தியின்கண் உண்டை வடிவமான அண்டகோடிகளெல்லாந் தங்கியிருக்கின்றன வாகலின் யாவும் அவனுடைய சுவாதீனப் பொருள்களேயாமென்க. இத்தகைய பரம்பொருள் இன்னும் மூவகையாக நிச்சயிக்கப்படும். விவரம் :— (க) சருவ வியாபக சருவானந்த ஞானாகாசப் பிரம சொரூபம். (உ) வரப்பிரசாத ஞானானுக்கிரக கிருபாகடாக்ஷ தடஸ்த பரம். (ங) அகோர வுக்கிர கரும பாவதகன கோபக்கினி ரூபம் எனவாம். இவற்றுண் மூன்றாவதாலே மறக்கருணையாக ஆன்மாக்களைத் தண்டித்தலும், இரண்டாவதாலே அநுக்கிரகித்துத் தன்பக்கலிலிருந் துய்திபெறத் தக்க பலன்களைக் கொடுத்தலும், முதலாவதாலே ஒன்றாய் வயங்கும்படி கடாக்ஷித்தலுமாம். ஒன்றாய் வயங்குதல்.—பரமான்ம போதத்திற் சீவான்மபோதம் இலயமாய் ஞானாகாசமேயாய்ப் பேதமின்றிப் பிரகாசித்தலாம். இதுவே, நித்திய கைவல்லிய முத்தியெனவும், சிவ ஐக்கியமெனவும், வாக்குக்கெட்டாத நிருவாணமெனவுங் கூறப்படும். இந் நிருவாணத்தினைச் சீவப் பிரம ஐக்கியமாகக் கூறுதல், பிரமம் அஞ்ஞியாகவே யாண்டுங் கலந்துள்ளதென்னும் அத்துவைதத்தோடு முரணுவதுமாம். ஈண்டேகான்ம முடிவுகொண்டு யாங்களே கடவுளென்று ஈசுவரோபாசனையைத் தள்ளிவிட்ட வாதிகளை

யும் இயமன் றனததிகாரத்தா னடாத்துவனுகலின், அவர்க ணிற்குநிலை முத்திநெறி யாதலு மில்லையென லுணரக் கிடக்கின்றது. இதனை,

"பன்மு கச்சமய நெறிப டைத்தவரு
மியாங்க ளேகடவு ளென்றிடும்
பாதகத் தவரும் வாத தர்க்கமிடு
படிற ருந்தலை வணங்கிடத்
தன்மு கத்திலுயிர் வரவ ழைக்குமெம
தரும னும்பகடு மேய்க்கியாய்த்
தனியி ருப்பவட நீழ லூடுவளர்
சனக னாதிமுனி வோர்கடஞ்
சொன்ம யக்கமது தீர வங்கைகொடு
மோன ஞானம துணர்த்தியே
சுத்த நித்தவரு ளியல்ப தாகவுள
சோமசேகரகிர் பாளுவாய்த்
தென்மு கத்தின்முக மாயி ருந்தகொலு
வெம்மு கத்தினும் வணங்குவேன்
றெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே."

என்று தாயுமானாரும்,

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவனடி சேரா தார்."

என்று திருவள்ளுவனாருந் தெரிவித்தவாறு கொண்டு மறிக. இறைவனடி சேராதார் பிறவிப்பெருங்கட னீந்தாரென்றது தானே, அறுபான்மும்மை நாயன்மார் கொண்ட கொள்கைகளாலும் வலியுறுகின்றது.

ஆன்மாக்களைத் தண்டித்தலென்பது, பாவ நிவாரண காரியமாய்த் தண்டநாயகனாகிய காலமூர்த்தியாதி தேவர்களாலும் அரசர் முதலியோராலும் மறுமையிலேனும் இம்மையிலேனுந் தக்கபடி தண்டித்து நியாயங் கொடுப்பதாம். அப்படிச் செய்தல், பிள்ளைக்குற்ற பிணியைப் பிதாவானவன் வைத்தியனு னீக்க முயல்வதுபோல முயல்வதாம்.



இது, கருணையே யன்றிக் கொடுமையன்றாகலின் நியாய வழிப் போதரும் மறக்கருணை யெனப்படும். இங்கே கருத்தன், தன்னை யண்ணினவர்கட்கே கற்பகந் தரித்திரத்தையும், தண்ணீர் தாகத்தையு நீக்குதல் போலத் துன்ப நீக்கம் புரிவன்; அண்ணாதார்க்கு அது செய்யானெனலு முணரக் கிடக்கின்றதென்க. நிற்க.

ஈசுவர சிருட்டி நசித்துவிடுமாயின் ஒருவருக்குஞ் சனனநோய் நசியாது. எதனாலெனின்,—அன்னமய கோசத்துள்ள உதிரம், மச்சை, மாமிசம், சருமம், என்பு, நரம்பு என்னும் ஆறுதத்துவத்தூல மழியின் உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களும்; சக்கு, சுரோத்திரம், ஆக்கிராணம், சிகுவை, துவக்கு என்னும் ஞானேந்திரியங்களும்; வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தமென்னுங் கருமேந்திரியங்களும்; பிராணன், உதானன், சமானன், அபானன், வியானனென்னும் வாயுக்களுமாகிய ௨௰-தத்துவங்க ளொருசேர யாக்கப்பட்ட சூக்குமவுடம்பையுடைய சீவான்மா, தான் நினைத்தவண்ணம் யாதானுமொரு காரியத்தை முடிக்க முடியாமே சொப்பன சீவனென மயங்குந்தன்மையா லென்க. இதனால், தூலமிருக்கும்போதே தகு தவங்களைச் செய்து தக்க பலன்களை மக்களடையவேணும். இக்காலத்தே எச்சித்தி யில்லாதொழியினுஞ் சிருட்டி காரியம் நிகழ்ந்துகொண்டிருத்தலின் விடுதலையுண்டென்பது இங்ஙனுய்த்துணரத் தக்க நுட்பமா மாதலின் அவ்விடுதலை முயற்சி வீணாகாதென்பதூஉம், அம்முயற்சிக்கு உபகாரப் பொருளாய தூல உடம்பும் அளவுடை யாகாரத்தாற் பேணிக் கொள்ளத் தக்கதென்பதூஉம் மறுக்கற்பாலன அல்ல.

தூலம்பெறற்குக் கருவிற்புகூஉம் ஆன்மா, வித்தினுள் அங்குரம்போலச் சுக்கிலத்தி லடங்கியிருந்து சுரோணித சம்பந்த மாதலும் ஆசயத்துளிருந்து வளராநிற்கும். சுக்கிலத்தி லுயிருள தென்பதைப் பூதக்கண்ணாடி வாயிலாகக் காணலாம். இவ்வுற்பத்தியின்மீ துண்டாம் ஆகாமியமாகிய

புதிய வினைகள், மரித்தவுடன் மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணாத்துவா, புவனாத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா, வென்னும் ஆறத்துவாக்களினுங் கட்டுப்பட்டிருக்கிற புண்ணிய பாவமாகிய சஞ்சிதமாகும். பிரார்த்த வினைக்கானது போக எஞ்சிய சஞ்சிதம் பின்னே தொடரக் காத்திருக்கும். இதனாற் புதிய ஆகாமியமே பிறவிக்கடலாய்ப் பெருகிவருந் தன்மை யுண்மையால் விவேகியானவன், பிராரத்தவினையைத் தேவகட்டளையென்று திருத்தியாக அனுபவித்துக் கொண்டு ஆகாமியத்தை அணுத்துணையுஞ் செய்யாதிருக்க வேண்டும். .செய்வதற்கு மூலமாயிருக்கிற சித்தவிருத்தி ௧௪-ஞ் சீவ சிருட்டியே ஆம். விவரம் :—

(௧) **காமம்**=இச்சை; தனதானியாதிகளை மேன்மேலுந் தேடுந்தன்மை, (௨) **குரோதம்**=சினம்; பூசல், (௩) **உலோபம்**=ஈயாமை, (௪) **மோகம்**=தான் றேடிய பொருண்மீதுள்ள அதிவிருப்பம், (௫) **மதம்**=செருக்கு; கிருத்தியாகிருத்தியங் கருதாதெழுதரு கருவம், (௬) **மாற்சரியம்**=பொறாமை, (௭) **இடும்பை**=அவமதிப்பு; உதாசனம், (௮) **வேட்கை**=பல திறத்த நசை, (௯) **ஈரிடை** ([illegible])=நமக்குற்ற துன்பம் பிறருக்கும் வரல்வேண்டுமென் றெண்ணும் ஒருவகைப் பொறாமை, (௧௦) **தர்ப்பம்** ([illegible])=(தன்னையே யுயர்த்திப் பேசு மியல்பு, (௧௧) **இராகம்**=பரதார கமன விருப்பம், (௧௨) **துவேஷம்**=பிறர்செய்த தீமைகருதி அதுபோன்றதை அவர்க்குத் தானுஞ்செய்யொரு தன்மை, (௧௩) **இடம்பம்**=பிறர் கண்டு புகழுமாறு பொருந்தா தளிக்குந் தானம் முதலியன, (௧௪) **அகங்காரம்** = நானென்றெழு மகந்தை எனவாம் இந்தப் பதினான்கும் நசித்தாற் பிறப்பிறப்பும் நசிப்பது உறுதிதான். இவை; சிவ சிருட்டியல்ல; சீவசிருட்டியே யென்பதற்கு ஏற்புடை நியாயம் உண்டுகொலோ ? எனின், —சிவ சிருட்டியாகிய சராசரப் பிரபஞ்சம் பிரளயத்தி லழியுங் காலத்துஞ் சீவர்களுடைய சனன மரண காரணங்களொழியாம னிலைத்து நிற்றலும், சிவசிருட்டி யிருக்கும் பொழுதே அச் சீவசிருட்டி சூனியப்படுமாயிற் போக்கு வரவற்ற மோக்கம் பெறலுமாகிய வுண்மை யுண்டென்க.



மோக்கத்தை நல்கியருளுங் கடவுளன்றி ஏனையோரா னீக்கப்படாப் பாசமாகிய ஆணவமலம், பசுக்களாகிய உயிர்கட்கு அனாதி யியற்கைத் தென்பதைப் பஞ்சாக்ஷரப் பதிபசு பாசவிளக்கமுடையார் (சிவஞான தேசிகர்)

"ஆணவமலமான் மாவுக் கனாதியி லியற்கை யென்னில்
ஆணவ மலத்தை நீங்கி யமலனை யடையா தாவி
ஆணவ மலமான் மாவுக் கனாதியிற் செயற்கை யென்னில்
ஆணவ மலத்தை நீங்கி யமலனை யடையு மான்மா."

என்னுஞ் செய்யுளான் மறுத்து, அனாதி செயற்கையாதல் வேண்டுமென்பாராயினார். செயற்கையினை அனாதியென்பது பொருந்துமாறு முளதாமோ? என்னுங் கடா ஈண்டுப் பிறத்தல்கூடும்.

அக்கடவுள் காருண்ணிய மெய்தற் கேதுவாஞ் சிவ புண்ணிய தவங்களு ளொதுவுஞ் சற்குரு முகத்தானன்றிப் பயன்படாதென்பது—

"புங்க மாஞ்சிவ புண்ணியத் தேசிகர்-
தங்கள் வாக்குப தேசம தன்றியே
இங்கி யற்றி னிரும்பய னில்லையாய்
மங்கு மென்னும் வரன்புக லாகமம்"

—சிவபுண்ணியத்தெளிவு

"த்யாநமூலம் குரோர்மூர்த்தி:-பூஜாமூலம் குரோ:ப்பதம்
மந்த்ரமூலம் குரோர்வாக்யம்-முக்திமூலம் குரோ:க்ருபா ||"

என்பனவற்றா லறியப்படுகின்றது. இன்னன பல. ஒருவனுடைய பரிபாக தசையை ஈசுவரனறிந்து அவனே குரு மூர்த்தியா யெழுந் தருளிவந் துரைப்பன வுரைத்தலுமுண்டு; அடியார்களைக்கொண் டப்படி யிழைத்தலுமுண்டு. இவ்வித காரியம், அவனது கருணைப்பிரவாக நியாயத்திற் பொதுவாயுள்ளது. மாயாப்பிரபஞ்ச பலனைச் சீவனாகிய கிஞ்சிஞ்ஞன் இச்சிப்பான். ஈசுவரனாகிய சருவஞ்ஞன் இச்சியான். இனையவாறு வீடுபேறன்றிப் பிறிதொன்றும் இச்சியாத்

தன்மை வாய்ந்தவனே பக்குவமுள்ள சீடனாவன். அவனே, இந்நூலில் விளக்கப்படுமின்பத்தைப் பெறற் கதிகாரி யாவன். இப்பக்குவத்தையே மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரமென்னுஞ் சத்திநிபாத நான்கனுள்ளும்முதிர்வுடைய தீவிரதரமென்று சிவசாத்திரங்கள் கூறும்.

தனதுண்மையையும், பசுவையும், சிவத்தையும் ஆவி காணுவா ருவரணித்துச் செம்பிற் களிம்பெனப் பரிபாகத்தி னீங்குமொரு சத்தித்தெனவுள்ள அவ்வாணவமும், சிருட்டி காலத்திற் காரியப்பட்டு வருவதெனவுள்ள கன்மமும், பிரபஞ்சத்தை மெய்யென் றனுபவிக்கச் செய்கின்ற திரோதையும், விஞ்ஞானகலருக்குத் தனு கரண புவனபோக முஞ் சுத்தவித்தையாதி ஐந்து தத்துவமுமா யிராநின்ற சுத்த மாயையும், பிரளயாகலருக்குஞ் சகலருக்குந் தனுகரண புவன போகங்களாயும் பிரகிருதிக்கலை முதலிய எழு தத்து வங்களாயு மிராநின்ற அசுத்த மாயையுமென மலங்க ளைந்தாம். இவ்வைந்தும் பாசமென்னுஞ் சொல்லிலடங்கும்.

அட்ட வித்தியேசுரரும், அணுசதாசிவரும், சத்தகோடி மகாமந்திரருமாகிய இம்முத்திறத்தவருமே விஞ்ஞானகலர். இவர்கள், ஆணவ மலமுஞ் சுத்த மாயாபோகமு முடை யார். இவர்கள், பக்குவத்திற் பரமசிவனாலனுக்கிரகிக்கப்பட் டுப் பரமுத்தியை யடைவர்.

நூற்றுப் பதினெட்டுருத்திரர்களும் புவனகருத்தாக் களுமா யிருப்பவர்களே பிரளயாகலர். இவர்கள் ஆணவங் கன்ம மென்னு மலமிரண்டும் அசுத்த மாயாபோகமு முடை யார். இவர்கள், பக்குவத்திற் பார்வதி பதியாகிய அந்தப் பரமசிவன் மான்மழு சதுர்ப்புய காளகண்ட திரிநேத்திரங்க ளிலங்கத் திருமேனிகொண் டெழுந்தருளிவந்து செய்யுமனுக் கிரகத்தாற் பரமுத்தியை யடைவர்.

பிரமா விட்டுணுமுதற் கிருமி யீறாகவுள்ள சீவர்களே சகலர். இவர்கள், ஆணவங் கன்மம் மாயையென்னு மல மூன்றும் பிரகிருதியிலே தனு கரண புவன போகமுமுடை யார். இவர்கள், பக்குவத்தில் அப்பரமசிவன் மானுடச்



சட்டை சாத்திச் சீவனுடைய ஊரும் பேரு மொழிப்பான் ஊரும் பேருங்கொண்டு ஞானசாரியனா யெழுந்தருளி வந்து சத்திநிபாத முறைகண்டு செய்யுமனுக்கிரகத்தான் முத்தியை யடைவர். விட்டுணுவைச் சகலரிற் கூட்டற்கு இடங் கொடாது கடவுளெனக் கூறுவது வைணவாகமம். அஃதெவ்வண்ணமாயினும் இந்நூலுழைக் கூறப்படுஞ் சிவ ஞானத்திற் கிழுக்கில்லை.

தனுவென்றது—பல்வேறு வகைப்படு தூலவுடம்பாம். ஆயுள், ஒரு கடிகை முதற் பத்துத் திங்கள்காறும் பல திறமாம்.

கரணமென்றது—சூக்கும வுடம்பாம். தூலமழிதல் போலழியா வன்மைத்து.

புவனமென்றது—பலதிறப்படு நாடு நகரமுமா யுள்ளது.

போகமென்றது—கன்மானுபவங்கட்குரிய உண்பன, தின்பன, குடிப்பன, கடிப்பன, விழுங்குவன, நக்குவன, உடுப்பன, முடிப்பன, தரிப்பன, திமிர்வன, இடுவன, எற் பன, நடப்பன, படுப்பன, பார்ப்பன, கேட்பன, தாரம், தனயர், பந்து, மித்திரர், பொன், மணி முதலியனவாக வகைசெய்து கூறப்படுவதாம்.

இவற்றுள், தனுவும் புவனமும் போகமுந் தூலசிருட் டியி லுள்ளன : கரணஞ் சூக்கும சிருட்டியிலுள்ளது: பூத தன்மாத்திரை, அகங்காரம், புத்தி, பிரகிருதி, கலையென்பன ஒன்றற்கொன்று சூக்குமமா யிருக்குமென்ப.

### இரண்டாவது

## அபக்குவர்கதியியல்

மூன் மொழிந்த பக்குவமில்லா அபக்குவரெவர்க்கும் அருளானந்த முண்டாகாது. எதனாலெனின்.—எல்லாம் மண் முதலிய பூதப் பொருள்களாகவே காணப்படுகின்றன: அவைக ளியற்கைய: அவைகளை யாரும் ஆக்கியளித்து

ஒழித்தல் கூடுமென்று எண்ணற்கு இடனின்று: அவைகட்கு
வேறாய் ஆன்மா வென்பதொன்று உண்மைப் பொருளா
யுள்ளதென்றும், அதனைத் தனது ஆணைவழி நிறுத்தியாளும்
ஈசுவரனுள னென்று முரைக்குஞ் சாத்திர சித்தாந்தங்கள்
நம்பத்தக்கன வல்லவெனச் சாதிக்கத் துணியு நிரீசுவரவாத
நாத்திக னிடத்திலேயும் தெய்வம் உண்டோ? இன்றோ?
என்னுமையம் முழுதுந் தொலையாது தங்கியிருத்தல்போலத்
தெய்வமுண்டென்னும் ஆத்திக னிடத்திலேயு மஃதுண்டோ?
இன்றோ? என்னுமையந் தொலையாது தங்கியிருத்தலின
வென்க. இவ்வைய மறுமாறு சற்குரு முகமாகச் சிவஞான
சாத்திரங்களை யினிதோதி யுணர்தலென்னும் அபரஞானந்
தோன்றிய பின்னர்க் குருமொழி பிடித்துத் தரிசித்தலென்
னும் அனுபவ ஞானமாகிய பரஞான மெய்தினவரே யவ்
வானந்த முடையோராவர். சாத்திரங்கள் ஒன்றோடொன்று
முரணுமாலோவெனின், — சிவபரம்பொருளைத் தியானித்
திருக்கும் வழி யெய்தப் பெறுமொரு ஞானமே சற்சாத்தி
ரங்களுட் கொளக்கிடக்கு முண்மையாகலின் அது, முரணு
மாறு யாண்டையதென்க. வேறு சில விடய வேறுபாடு
கள், கற்பந்தோறும் படைப்பு வேறுபா டுடைமையி
னெய்தியனவா மாகலின் வேறுபடக் கூறலும் பொருந்து
மென்று சமாதானஞ் சாற்று புத்தகங்களுமுள. அங்ஙன
மாயின், சீதாபகரணமும் இராம இராவண யுத்தமும் பன்
முறை யேற்பட்டு அது சிறிது சிறிது பேதமாக வுள
தென்றே கோடல் வேண்டு மென்பதும் இப்படி யொவ்
வொரு வரலாற்றிற்குங்கோடன் முறையாமென்பது மேற்
படலானும், அனைத்து மொற்றுமையாகாமே சிறிது சிறிதே
பேதமெய்துத லெவ்வாற்றா னென்னும் இருங்கடா வெழ
வுளதானும், அப்பேத காரணமுஞ் செய்கையும் அனாதி
தொடக்கமாக ஈசுவரனை வேற்படுகின்றன வென்பது
கொளக் கிடத்தலானும், இவ்வகை யியல்புடை யீசுவரன்
சீவர்களகத்தே இது பாவம் இது புண்ணிய மென்பன
கண்டு நீதி செலுத்த வுரியவனாகா னென்பது சித்திக்கின்ற
மையானும் அச் சமாதானஞ் சால்புடைத்தன்றென



விதிவாத மறுப்பினர் மறுப்பால். அன்றியும், கற்ப காலங்
களிற் புத்தகங்க ளழியாதிருக்கு மென்றற்கும், இன்ன
கற்பத்தில் இன்ன புத்தகந் தோன்றிற் றென்னும் விவரத்தை
அவ்வப்புத்தகங்களுட் காணப் பெறாதார், மேலே கூறியவாறு
கற்பபேத மெடுத்துக் கழறற்கும் எற்புடையேது வின்
றென்னு மறுப்பு எதனா லொழியுமால்! கற்பந்தோறு மேற்
பட்ட தேவார திருவாசகாதிகளுமுளவோ? அவற்றை
யின்ஞான் றெடுத்துக் காட்டுநரு முளரோ? என்னுங்
கடாக்கட்கு இறுக்கும் விடை எவையாமால்! பிரபவமுதலிய
வருடங்களுஞ் சித்திரைமுதலிய மாதங்களும் ஞாயிறுமுதலிய
கிழமைகளுஞ் சென்று சென்று வருமாறு இந்திரர்களும்
மனுக்களும் வருவரென்றல் காலவளவையையும் அதிகாரி
மாறி வருதலையுங் குறிப்பதாதல் வேண்டும். பிரமன் முதலி
னோர் தோற்றமு மொடுக்கமுங் காலவளவையுட் படுவன
வாயினும் அன்னோர்புரி சிருட்டிமுதலியன, சீவர்கண்மாட்
டெஞ்சியுள்ள இச்சைவழியே நிகழ்வனவாகலின் ஈசுவர
காரியம் விதிவாதத்துட் படுமென்றற்கும் இடனின்றன்றே.
பன்முறை பிரதி செய்யப்பட்ட வகையானும், ஒருவர்க்
கொருவர் போதித்த வகையானும், அப்போதிப்பு—ஒருவன்
பெயரே னரே வேறொருவனுக்கு மெய்தலா மென்பதை
யுணராதெழுந்த வாற்றானும் பிரதி வேறுபா டேற்பட்டிருத்
தல் கூடுமென்னு நிச்சயம் ஈண்டேற்புடைச் சமாதானமா
மென எண்ணும் விவேகிகள், நியாயவழியே அவ்வேறு
பாடும் நீக்கற்பாலதாமென் றுரையார் கொலோ! மேலே
கூறிய நிரீசுரவாத அவிவேகங் கணித்து இங்கே கண்டித்
துக் காட்டுவ தென்னெனில்,—

### மூன்றாவது

## நிரீசுரவாதகண்டனவியல்

அனாதியான கடவுளொருவனுண்டென்னும் ஆத்திகரி
னும் விசேட அறிவுடைத்த சுய ஞானிகள் யாங்களென்று
பிதற்றிப் பூதங்களையே யனாதி யென்னும் பூதவாதியோர்,

தாங் கற்ற (Chemistry) கெமிஸ்ட்ரியின்படிக்கேனும் வேறு (Science) சயன்சின் படிக்கேனும், தஞ் சுயஞானத்தின் படிக்கேனுந் தக்க ஆலோசனை புரிந்து மண்ணாதியைந்தையும் அம்மியில்வைத் தரைத்து உருட்டியோ வேறெவ்விதமாகவோ இஞ்ஞான்று முளைத்து வளரத்தக்க யாதானுமொரு விதையாஞ் சிருட்டியைச் செய்ய மாட்டுவாராயின், அஞ்ஞான்றும் இன்னணம் எவனோ ஒரு மனிதனிருந்து செய்த காரியமே இவ்வுலகாயுளது; அவன் ஏனையோர் போல மரித்துவிட்டானென்று நிச்சயிக்கலாம். அஃதொழிந்து பூதப்பிரவிருத்தியாய் யாவுமுண்டாயினவென்று பிதற்றுவது குயவன் வனையாக் குடமென்றதிர்ப்ப தொக்கும்.

அவர் நினைப்பின்படி பூதங்களே யாவையு முண்டு பண்ணுமாயின், எல்லா யோசனையுமுடைய அறிவு அவற்றிற்கிருக்கவேண்டு மன்றோ? ஆயின், அவ்வறிவைக் கடவுளாக வேணு மவரொப்புக்கொள்ளா தொழிதன் மட்டறு மடமையாமே!

மேல், அந்தப் பூதங்க ளொன்றாய்ச் சேர்வதுதா னறிவென் றவரறையின், அவைகளைச் சேர்த்துவைத்த அறிவு யாதோ? என்னுங் கடா வெழுவதோடு அறிவில் பொருள்களின் கூட்டத்தா லறிவு தோன்றுமென்று பொருளியல் பறியா துரைப்பதென்? என்னும் வினாவுமெழும். மேல், ஒன்றாய்ச் சேர்வதும் (Nature-நேச்சர்) இயல்பென்னின்,- தனித்தனி அணுதியா யுள்ள அவற்றின்கட்டோன்று மரஞ் செடி முதலியன, பூத்தற்குங் காய்த்தற்குங் காலவளவையி னுட்பட்டு நிற்குமா றென்னை? என்னுங் கடா வெழுதலோடு காலமே மேம்பட்டபொரு ளென்றலுஞ் சித்திக்கும். ஈண்டுக் காலமென ஒருபொரு ளின்றெனின்,—அப்பூத்தலுங் காய்த்தலு மில்லா தொழியும்; இராப்பக லில்லையென்பது மெய்துமாகலிற் காலமுறுப்புப் பொருந்தாதென்பதூஉம், அக்காலமு மறிவிலதாதலின் அஃதுந் தானே பிரபஞ்சத்தை வரம்புவழி நடாத்து மெனற்கு மிடனின்றென்பதூஉக்



தோன்றும். இவையேயுமன்றி, அப்பூதங்கள் ஆகாயம் காற்று, தீ, நீர், மண்ணாயிருத்த லுண்மையாயின், பை முட்டை, வியர்வை, நிலம் என்னு நாற்றிறத் தோற்றத்தை முண்டுபண்ணிய காரணமென்னை? கண்டு களிக்கவா? களித் தற்குக் கண்ணுங்கருத்தும் அவற்றின்கட்காட்டல் கூடுமோ! காரணமில்லையென்புழியு நாத்திகனாகிய நீ செய்யுங் காரியம் ஒரோவொன்றுக்குங் காரணங் காணக்கிடக்கையில், நீ தோன்றதற்கு முதற்காரணமாயிருந்த பூதங்களின் காரியத் திற்குமட்டுங் காரணமின்றென்ப தெவ்வாற்றாற் பொருந் தும்? என்னுங் கடாக்களு மெழுதருமால்.

இன்னும், யாதானுமொரு விந்துவினிடத் தன்றே இயங்குதிணை யறிவின் றேற்றம் வளர்ந்துவரல் காணப்படுகின்றது. ஆயின், பிரதமவிந்து, யாண்டிருந்து தோன்றிற்று? அந்த விந்து தோன்று முன்னர் அறிவில்லாப் பூதங்கள் எப்படி யத்திற விந்துவை யுண்டுபண்ணும்? என்னும் வினாக்களுமெழும். இப்படிப் பல் கடாக்கள் எழுதருமாற்றானும் பூதவாதிவாய் பொள்ளென மூடிக்கொள்ளு நீர்மைத்தேயாம்.

பூத மைந்துடன் சூரியன், சந்திரன், உயிரென்னு மூன்றுஞ் சேரப் பொருள் எட்டாகும். இவ்வெட்டையும், அகண்டிதாகார சிவனுக்கு அட்டமூர்த்தமென்று பிரமாண நூல்கள் செப்புதலானே எங்கே பார்த்தாலுஞ் சைவங் காணப்படுகின்றதே; ஈண்டுத் தெய்வமில்லை யென்று நாத்திகர் கூறுங் கூற்றுத்தான் எவ்வாற்றான் மணம்பெறும்! அஃதும் நாத்திகமேயாதல் சரதம்.

காணப்பட்ட எந்தப் பொருளையும் பிரித்துப் பிரித்து நசித்து நசித்து எவர் பார்க்கினும் அக்கினியிலிட்ட காட்ட நாற்றம் அன்னியப்பட்டதுபோல ஒன்று விசேடித்து நிற்பதே உறுதி, அது, முக்காலத்து மழியாச் சத்திய

பதார்த்தமெனவும் விவேகிகளறிவர். தூலபடிவ மொழியினும் அதனுள்ளுடம்போடு அதிசூக்கும வத்துவாயிருந்த வான்மா வென்பதொன் றுண்டெனவு மவரறிவர்.

அந்தரப் பிரவேச விவித சூக்குமரூப பைசாசங்களையு மிங்கே யுதாரண மாக்கலாம். பைசாசங்களி னிலைமைகளையே யறியா நாத்திகர், பரமார்த்த பராபரத்தின் றன்மையினை யெப்படி யறிய வல்லுநராவர்!

புலால்விழிக்குப் புலப்படா வெதனையு நாம் நம்பமாட்டோமென்னு மொருசார் நாத்திகர், இரும்பைக் காந்தமிழுக்கும்போது மதுபற்றியிழுக்க நாம் பார்த்ததில்லையே, இரும்பு தானே யெப்படியோ கூடிற்றென்று அறிவுமாழ்கிக் கூற வேண்டியவரே யாகின்றார். நம்புவாராயின், கொண்ட நாத்திகத்திற்கு ஆணியெய்துமே. தூல திருட்டிக்குப் புலப்படாச் சூக்கும காரியங்கள், தெய்வாதீனத்துள்ளன வெனற்கு மந்திர சித்திகளும், மெய்யடியவர் மாட்டுண்டாம் பற்பல வற்புதங்களு முளவாலோ.

தெய்வ மின்றென்று தீதற்ற நாப்படைத்த நாத்திகர், தாம் பயிலு மொழிகளைப் பிரசவ அறைக்கு ளிருந்தபடியே தாமே கற்றுக்கொள்ளாம லுரைப்பா ருரைகேட்டுப் பகரப் பழகிப் பின்னர் விதண்டை படிப்பதும், யாங்கள் சுய ஞானிக ளென்பது மென் னீர்மையவாம்! உரைப்பாருரையே யெவர்க்கும் பரம்பராக்கிரமமாக நிகழ்வதை அவர் ஒப்புவாராயின், அதற்குப் பூருவாசாரிய ரொருவ ரிருந்தவராதல் வேண்டு மென்பதும் அவ ரொப்பவேண்டியதே யன்றோ? அப் பூருவாசாரியரான் முடிவு செய்யப்பட்டிருக்கிற கடவுணிச்சயத்தை, அவர் தந்த மொழியை அது சார்ந்து வருவதையன்றித் தாமே யொருமொழியுஞ் செய்யச் சத்தியற்ற கடவுட் டுரோகிகளாகிய நாத்திகர் மறுப்பது, அண்டத்தை யணு விழுங்க முயறலொக்கும்.

(தொடரும்)

அடுத்தமாதக் கூட்டம் :—இது, இராணிப் பேட்டை (ஸ்ரீமத் குமார சுவாமிகள் மடத்தில் 1948-ஆம் நிறுவப் பெற்று, முறையாக நடந்து வருகிற) வார வழிபாட்டுக் கழகத்தின் ஆதரவில், ஆர்க்காடு போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழாசிரியர் வித்வான்-திரு. ஷண்முக தேசிகர் அவர்கள் முயற்சியால் 7-11-1954 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி முதல் நடைபெறும். ராவ்சாஹெப் கல்-முருகேச முதலியார், திருவாளர்கள்-ச. சச்சிதாநந்தம்பிள்ளை, ச. சிவகுமாரனார், திருவாலங்காடு சப்பாபதி தேசிகர், ம. சி. நித்தியாநந்தம், ம. பா. முதலியோர் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார்கள். அன்பர்கள் திரண்டு வருக.

சமாஜப் பொதுக்கூட்டம் :—நமது சமாஜத்தின் 49-ம் ஆண்டுவிழா நடைபெற வேண்டிய இடம், தேதிகள், தலைவர்கள் முதலிய விவரங்களைப்பற்றி ஆலோசித்து முடிவு செய்தற்கும், சமாஜவிதிகளில் சமாஜக் கணக்குகளைப் பற்றிய சில திருத்தங்களை நிறைவேற்றுதற்கும் நமது சமாஜப் பொதுக்கூட்டம் ஒன்று, 1954-ஆம் அக்டோபர்மீ 16உ மாலை 5 மணிக்கு இராயப்பேட்டை 3 மோப்ரேஸ் வீதியிலுள்ள குகாநந்த நிலையத்தில் கூடும். அன்று போதிய கூட்ட நிறைவெண் இல்லாவிடில், அக்கூட்டம் அதேயிடத்தில் மறுநாள் மாலை அதே மணிக்குக்கூடி வருவோரைக்கொண்டு முடிவு செய்யும்.

சமாஜம் நடத்துகிற சைவத்தேர்வுகள் :—இவை முன் அறிக்கைகளிற் குறித்தபடி 7-11-1954-ல் நடைபெறும். தேர்வுகட்குத் தோன்றி விடைத்தாள்களை எழுத இருக்கும் மாணாக்கர்கட்கு தேர்வுநிலைய நுழைவுச் சீட்டுகள் 30-10-54 அன்று சென்னையிலிருந்து தபால்மூலம் அனுப்பப்படும். மாணாக்கர்கள் விடைத்தாள்கள் எழுதுவதற்குத் தேவையான காகிதம் பென்சில் பேனா மைக்கூடு முதலியவற்றோடு தேர்வுநிலையத்தில் காலை 9-45 மணிக்கே வருதல் நலம். தேர்வுகள் 7-11-1954 காலை 10 மணிக்குத் தொடங்கும்.

மெய்கண்டார் திருநாள் :—இது ஐப்பசி சுவாதியன்று 27-10-54 புதன்கிழமை நிகழ்வதால், அன்று சைவ சித்தாந்தத்தில் உண்மையான பற்றுடைய அன்பர்கள் எல்லாம் தங்கள் இல்லங்களிலும், சபைகளிலும் இத்திருநாளைக்